**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**

**TIRUVANNAMALAI.**

**S.C. NO. 107/2014**

**PW 21**

| | | |
|---|---|---|
| Name | : | மரு. பராசக்தி |
| Father's/Husband's Name | : | மோகன்குமார் |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05.02.2025.

**A1 to A3 present.**

**முதல் விசாரணை -**

நான் தற்போது சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் இயக்குனராக பணி செய்து வருகிறேன் . கடந்த 14.05.2013 ம் தேதியன்று செங்கல்பட்டு அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் பேராசியராக பணியில் இருந்தபோது தண்டராம்பட்டு காவல் ஆய்வாளர் அவர்களிடமிருந்து குற்ற எண் . 120/2013 நாள் 25.04.2013 என்ற வழக்கில் இறந்துபோன 29 வயது மதிக்கத்தக்க பாபு த /பெ. பாலு என்பவருக்கு திருவண்ணாமலை அரசு தலைமை மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு அவரது உடலில் இருந்து எடுக்கப்பட்ட நாவடி எலும்பினை பரிசோதனை செய்வதற்கான விண்ணப்பத்துடன் சீல் வைக்கப்பட்ட அட்டை பெட்டி ஒன்றினை காவலர் எண் . 106 திரு. முருகன் என்பவர் மூலமாக பெறப்பட்டு நான் அதனை பரிசோதனை செய்தேன்.

(2) அந்த சீல் வைத்த அட்டை பெட்டியினை பிரித்து பார்த்தபோது அதில் சீல் வைக்கப்பட்ட ஆர்லிக்ஸ் பாட்டில் ஒன்று நாவடி எலும்பு மற்றும் அதை சுற்றியுள்ள திசுக்களுடன் உப்புநீரில் பதப்படுத்தப்பட்டு காணப்பட்டது .. அதனை பரிசோதனை செய்ததில் நாவடி எலும்பு முறிவு எதுவும் இல்லாமல் அதை சுற்றியுள்ள திசுக்கள் வெளிறிய நிலையில் காணப்பட்டது. நாவடி எலும்பு நல்ல நிலையில் இருந்ததாக நான் கருத்து தெரிவித்தேன். என்னிடம் காட்டப்படுவது தான் நான் வழங்கிய கருத்து ( அது ஏற்கனவே அ.த.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது) இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

Sd/- Gopinath.,M.L.,
Additional District Judge,
Tiruvannamalai.